

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (29.07.2023) தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் உள்ள மாணவர் படப்பிடிப்புத் தளத்தினை பார்வையிட்டார்கள். இந்த ஆய்வின்போது முதலமைச்சரின் செயலாளர் முனைவர் ம.சு.சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு.இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், இந்நிறுவனத் தலைவர் வி.ராஜேஷ், மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று முன்தினம் (29.07.2023) தமிழ்நாடு அரசு எம்.ஜி.ஆர். திரைப்படம் மற்றும் தொலைக்காட்சிப் பயிற்சி நிறுவனத்தில் Animation visual Effects கட்டடத்தில் செயல்பட்டு வரும் ஒலிப்பதிவுக் கூடத்தினை பார்வையிட்டார்கள். இந்த ஆய்வின்போது முதலமைச்சரின் செயலாளர், முனைவர் ம.சு.சண்முகம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் மரு. இரா.செல்வராஜ், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் த.மோகன், இந்நிறுவனத் தலைவர் வி.ராஜேஷ், மற்றும் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### மணிப்பூர் விவகாரம்:

# பிரதமர் மோடி உண்மை கூற வாய் திறக்காதது ஏன்?

## ‘தினகரன்’ தலையங்கத்தில் சாடல்!

*சென்னை, ஜூலை 31-*

மணிப்பூர் விவகாரம் தொடர்பாக பிரதமர் மோடி அவர்களை நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினால் வாய் திறக்காமல் இருப்பது குறித்து ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில், பொய் கூற வாய்திறக்கும் மோடி உண்மை கூற வாய் திறக்காதது ஏன்? என சாடியுள்ளது.

அது வருமாறு:-

மணிப்பூரில் மெய்தீஸ், குக்கி ஆகிய இரு சமூகத்தினரிடையே கடந்த மே 3ம் தேதி ஏற்பட்ட மோதல், கலவரமாகி இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. கொடூரத்தின் உச்சமாக, பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தி வெறியாட்டமாடியிருக்கிறார்கள் அரக்க மனம் படைத்த சிலர். மாநிலத்தில் ஆட்சி செய்யும் பா.ஜ. முதல்வரான பிரேன்சிங், கலவரத்தின் போது, இதுபோல் பல நிர்வாண ஊர்வலங்கள் நடந்துள்ளது, அதனால் தான் இணைய சேவையை தடை செய்தோம் என விளக்கமளிக்கிறார். மறுபுறத்தில் ஒன்றிய அரசும், பிரதமரும் மணிப்பூர் விவகாரத்தில் மவுனமாக இருந்து, கலவரம் அதிகரிக்க காரணமாகி இருக்கிறார்கள், ஆளும் பா.ஜ. அரசின் மவுனத்தால், மக்கள்



தினகரன்

மணிப்பூரில் எம்.பி.,க்கள் குழு

அழிவதை எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்க்கின்றன. தொடர்ந்து மக்கள் விரோத செயலை மேற்கொள்ளும் பா.ஜ. அரசை வீழ்த்த 26 கட்சிகள் ஒன்றிணைந்து இந்தியா என்ற கூட்டணியை உருவாக்கியிருக்கிறது. பாட்னா, பெங்களூரு என இரு இடங்களில் தலைவர்கள் நடத்திய ஆலோசனை கூட்டத்திற்கு பின் இக்கூட்டணி, பா.ஜ.வை வலுவாக எதிர்த்து நிற்கிறது.

கடந்த 20ம் தேதி தொடங்கிய நாடாளுமன்ற கூட்டத்தில், ஒற்றை கோரிக்கையாக மணிப்பூர் விவகாரத்தை தொடர்ந்து எழுப்பி வருகிறது. ஆளும் அரசு அதற்கு செவி சாய்க்காமல், எதிர்வினையாற்றும் நிலையிலும் மணிப்பூர் கலவரம், வன்கொடுமைக்கான நீதி, அதனை கட்டுப்படுத்த தவறியவர்கள் மீது நடவடிக்கை போன்றவற்றை கோரியும், உண்மை நிலையை பிரதமர் மோடி விளக்கவும் வலியுறுத்துகிறது. 3 மாதமாக கலவரம் நடக்கும் நிலையில், நிர்வாண வீடியோ வெளியான பிறகே, நாடாளுமன்றத்திற்கு வெளியே, பிரதமர் வாய் திறந்து குற்றவாளிகள் தப்ப முடியாது எனக் கூறியிருக்கிறார். ஆனால், நாடாளுமன்றத்திற்குள் எதிர்க்கட்சிகளின் கேள்விக்கு பதிலளிக்க பிரதமர் இன்னும் முன்வராமல் இருப்பது மக்கள் மீதுள்ள அக்கறையின்மையை காட்டுகிறது. எதிர்க்கட்சிகளின் இந்தியா கூட்டணி, அடுத்தகட்ட நகர்வுக்கு சென்றிருக்கிறது. எப்படியாவது மணிப்பூர் உண்மை நிலவரத்தை பிரதமர் மோடி, நாடாளுமன்றத்தில் தெரிவிக்க வேண்டும் என்பதற்காக, ஒன்றிய அரசு மீது நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டு வந்திருக்கிறது. மணிப்பூர் மக்கள் மீது ஆளும் அரசு கவனம் செலுத்தாத நிலையில், இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் குழு நேரடியாக களமிறங்கியிருக்கிறது.

அங்கு நடந்துள்ள கலவரம், பாதிப்பு, காரணமானவர்கள் குறித்து அறிய, கள ஆய்வுக்கு இந்தியா கூட்டணியின் சார்பில் 21 எம்.பி.க்கள் நேற்றைய தினம் மணிப்பூர் சென்றுள்ளனர். இவர்கள் மக்களிடம் விசாரித்து உண்மை நிலையை அறிந்து அறிவிக்க உள்ளனர். இப்பயணத்தில் தமிழகத்தின் பங்கு அளப்பரியது. தி.மு.க. சார்பில் கனிமொழி, வி.சி.க. சார்பில் திருமாவளவன், ரவிக்குமார் என 3 எம்.பி.க்கள் சென்றுள்ளனர். இதுதவிர காங்கிரஸ் எம்.பி.க்கள் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, கவுரவ் கோகாய், திரிணாமுல் எம்.பி. சுஷ்மிதாதேவ் என அனைத்து எதிர்க்கட்சி எம்.பி.க்களும் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் இரண்டு குழுவாக பிரிந்து, கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலையை அறிவதோடு, அவர்கள் அப்பிரச்சினையில் இருந்து மீண்டு வர என்ன செய்ய வேண்டும் என்பதை கள ஆய்வு செய்கின்றனர். நாளைய தினம் டெல்லி திரும்பும் இக்குழு, ஒன்றிய அரசிடம் இருந்து எதிர்பார்ப்பது, மணிப்பூர் உண்மை நிலையை மக்களிடம் தெளிவுபடுத்துவதும், தீர்வு காணுவதையுமே. அதனால், நம்பிக்கையில்லா தீர்மான விவாதத்தின் போதாவது, மவுனம் கலைந்து பிரதமர் மோடி உண்மை நிலையை பேச வேண்டும் என எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

இவ்வாறு இதில் கூறப்பட்டுள்ளது.

# ஏற்கனவே 6 வழக்குகளை ஒப்படைத்தும் ஒருவரையும் கைது செய்யாத சி.பி.ஐ.!

## மணிப்பூர் கும்பல் வல்லுறவு வழக்கும் ஒப்படைக்கப்பட்டது!

*இம்பால், ஜூலை 31-*

மணிப்பூர் மாநிலத்தில், கடந்த மே 4 அன்று பழங்குடி பெண்கள் இருவரை, ஆயிரக்க ணக்கான ‘மெய்டெய்’ இளைஞர்கள் சேர்ந்து, நிர்வாணமாக இழுத்துச் சென்றதுடன், அவர் களைக் கும்பல் வல்லுறவுக்கும் உள்ளாக்கிய கொடுமை நாட்டையே அதிர்ச்சிக்கு உள்ளாக்கி யது. இந்த கொடூரம் மிகவும் தாமதமாக கடந்த ஜூலை 19 அன்றுதான் வெளியுலகிற்குத் தெரிய வந்தது. தற்போது இந்தச் சம்பவம் ஒன்றிய மாநில பாஜக ஆட்சியாளர்களுக்கு மிகப் பெரிய நெருக்கடியாக மாறியிருக்கிறது. மணிப்பூர் நிலவரம் குறித்து பிரதமர் மோடி பதிலளிக்கக் கோரி, எதிர்க்கட்சிகள் நடத்தி வரும் போராட்டங்களால் நாடாளுமன்றம் கடந்த 7 நாட்களாக முடங்கிக் கிடக்கிறது. இதனால், எப்படியாவது இந்த பிரச்சனை களிலிருந்து தப்பித்துவிட வேண்டும் என்று துடிக்கும் மோடி அரசு, பல்வேறு வேலைகளில் இறங்கியுள்ளது. முதலில் இப்படியொரு சம்பவமே நடக்கவில்லை; வெளியான வீடியோ போலி சித்தரிக்கப்பட்டது என்று கதையை மாற்ற வேண்டும். அல்லது, இந்த விவகா ரத்தை விசாரணை என்ற பெயரில் அமுக்கிவிட வேண்டும் என்று பலவாறாக யோசனையில் இறங்கியுள்ளது. அந்த அடிப்படையில்தான், மணிப்பூர் உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தவர்களைத் தேடிப் பழிவாங்கும் திட்டத் தைக் கையில் எடுத்தது. குக்கி பழங்குடி பெண்கள் மீதான கும்பல் வல்லுறவுக் கொடுமை யை வெளிச்சத்திற்கு கொண்டு வந்த வீடியோவை எடுத்தவரை, மோடி அரசு கைது செய்தது. அவர் இந்த வீடியோவை எடுப்பதற்குப் பயன் படுத்திய மொபைல் போனையும் பறிமுதல் செய்தது.

அடுத்ததாக பழங்குடி பெண்கள் 2 பேர் கும்பல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட கொடுமை குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்த ரவிட்டுள்ளது. சிபிஐயும் அதிகாரப் பூர்வமாக வழக்குப் பதிவு செய்து விசாரணையைத் துவங்கியுள்ளது. மணிப்பூர் வன்முறையோடு தொடர்புடைய 6 வழக்குகள் ஏற்கெனவே சிபிஐயிடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கின்றன. சிபிஐ அமைப் பும், 6 வழக்குகளை பதிவு செய்தது. இந்த வழக்குகள் தொடர்பாக விசாரணை மேற் கொள்ள டிஐஜி அந்தஸ்தில் உள்ள அதி காரி தலைமையில் சிறப்பு விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. எனினும் இந்த 6 வழக்குகள் தொடர்பாக இதுவரை ஒருவரையும் சிபிஐ கைது செய்யவில்லை.

“6 வழக்குகள் தொடர்பாக கடுமையான சூழல்களில் சிபிஐ விசாரணை மேற்கொண்டு வருகிறது. விசாரணை மேற்கொள்ளச் செல்லும்போது கூட்டமாகத் திரண்டு பொது மக்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதால், சாட்சிகளைக் கண்டறிவது கடினமாக உள்ளது. எனி னும், விசாரணை தொடர்ந்து நடைபெற்று வரு கிறது” என்று கைது நடவடிக்கை எடுக்க முடி யாத அவல நிலையில் தாங்கள் இருப்பதை சிபிஐ அதிகாரிகளே வெட்கமின்றி ஒப்புக் கொண்டுள்ளனர். இந்நிலையில், அவர்களிடமே காங் போக்பி மாவட்டத்தில் பழங்குடி பெண்கள் 2 பேர் கும்பல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட வழக்கையும் மோடி அரசு தற்போது ஒப்படைத்துள்ளது. ஏற்கெனவே 6 வழக்குகளை விசாரிக்க முடியாமல் தவிக்கும் சிபிஐயிடம் தற்போது 7ஆவது வழக்காக இந்த வழக்கு சேர்ந்துள்ளது. பழங்குடி பெண்கள் வல்லுறவுக்கு உள் ளாக்கப்பட்டது தொடர்பாக 18 வயதுக்கு உட்பட்ட சிறுவன் உள்பட இதுவரை 7 பேரை மணிப்பூர் காவல்துறை கைது செய்துவிட்டது. அத்துடன், நிர்வாணமாக இழுத்துச் செல்லப்பட்ட பழங்குடி பெண்களிடம் வாக்குமூலங் களை பதிவு செய்யும் நடவடிக்கையையும் தொடங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

**மணிப்பூர் வன்முறைக்கு எதிராக லண்டனில் அமைதிப் பேரணி:**

பிரிட்டனை மையமாக வைத்து செயல்படும் இந்திய வம்சாவளி பெண்கள் குழு மணிப்பூர் வன்முறைக்கு எதிராக அமைதி வழிப் போராட்ட பேரணி யை மேற்கொண்டனர். அமைதி வழிப் பேர ணியை வெளிப்படுத்தும் விதமாக இந்தக் குழு முகக்கவசம் அணிந்து பேரணியில் கலந்து கொண்டனர். லண்டனில் உள்ள இந்தியன் ஹை கமிஷன் முன்பு பதாகைகளை ஏந்தி நின்ற இந்தக்குழு பின்னர் அங்கி ருந்து நாடாளுமன்ற வளாகத்துக்கு எதிராக உள்ள மகாத்மா காந்தியின் சிலை நோக்கிச் சென்று தங்களது இந்த அமைதி பேரணியை முடித்துக் கொண்டனர். பேரணியில் கலந்துகொண்ட இந்திய வம்சாவளிப் பெண்கள், “மணிப்பூரில் இரண்டு குக்கி இன சகோதரிகளை நிர்வா ணமாக்கி ஊர்வலமாக இழுத்துச்சென்று கும்பல் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக் கப்பட்டதற்கு எதிராக இந்த அமைதி வழிப் பேரணியை நாங்கள் நடத்தியுள்ளோம். அந்த சகோதரிகளுடன் நாங்கள் உறுதியாக துணை நிற்கிறோம்” எனக் கூறினர்.



சிவகங்கை மாவட்டக் கழகச் செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பனை சாக்கோட்டை ஒன்றியம் ஓ.சிறுவயல் கிராமத்தைச் சேர்ந்த கழக முன்னோடியும் முன்னாள் தொண்டரணி அமைப்பாளருமான ஆ.பாஸ்கரன், தனது 64 வது பிறந்த நாளை முன்னிட்டு சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### விருதுநகர் மாவட்டம் – திருச்சுழி வட்டத்தில்

# கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் - விண்ணப்பப் பதிவு முகாம்கள்!

## நிதி – மின்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பார்வையிட்டார்!

*விருதுநகர், ஜூலை 31-*

விருதுநகர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன் பெற விண்ணப்பப் பதிவு முகாம்கள் நடைபெற்று வருவதை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பார்வையிட்டு, விண்ணப்பங்களை பயோ மெட்ரிக் முறையில் பதிவு செய்யும் பணிகளையும், முகாம்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

விருதுநகர் மாவட்டம், திருச்சுழி வட்டம், தமிழ்பாடி, காரியாபட்டி வட்டம், கல்குறிச்சி, விருதுநகர் வட்டம், ரோசல்பட்டி, சத்திரெட்டியாபட்டி ஆகிய இடங்களில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பப் பதிவு முகாம்கள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் திரு ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் அவர்கள் முன்னிலையில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு நேரில் சென்று பார்வையிட்டு, விண்ணப்பங்களை பயோ மெட்ரிக் முறையில் பதிவு செய்யும் பணிகளையும், முகாம்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

விருதுநகர் மாவட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன் பெற விண்ணப்பங்கள் நியாய விலைக் கடைப் பணியாளர் மூலம் ஒவ்வொரு நியாயவிலைக் கடைப் பகுதியில் முகாம்கள் நடைபெறும் நாள் மற்றும் நேரம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் விண்ணப்பம் மற்றும் டோக்கன் ஆகியவை வழங்கப்பட்டு, விண்ணப்பப் பதிவு முகாம்கள் முகாம் 24.07.2023 முதல் 04.08.2023 வரையும், இரண்டாம் கட்ட முகாம் 05.08.2023 முதல் 16.08.2023 வரை இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளன. அதன்படி, முதல் கட்ட விண்ணப்பப் பதிவு முகாம் 24.07.2023 முதல் நடைபெற்று வருகிறது.

விண்ணப்ப பதிவு முகாம் நடைபெறும் குடியிருப்புகள், தெருக்கள், வார்டு மற்றும் அவற்றுக்கான நாட்கள் குறித்த விவரங்கள் நியாயவிலைக் கடைகளில் தகவல் பலகையாக வைக்கப்பட்டு, ஞாயிற்றுக்கிழமை உட்பட அனைத்து முகாம் நாட்களிலும், காலை 9.30 மணி முதல் 1 மணி வரையும், பிற்பகல் 2 மணி முதல் 5.30 மணி வரையும் நடைபெறுகிறது.

அதன்படி, திருச்சுழி வட்டம், தமிழ்பாடி, காரியாபட்டி வட்டம், கல்குறிச்சி, விருதுநகர் வட்டம், ரோசல்பட்டி, சத்திரெட்டியாபட்டி ஆகிய இடங்களில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் பயன்பெற விண்ணப்பப் பதிவு முகாம்கள் நடைபெற்று வருவதை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, விண்ணப்பங்களை பயோ மெட்ரிக் முறையில் பதிவு செய்யும் பணிகளையும், முகாம்களுக்கு வருகின்ற மகளிர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

பின்னர், பதிவு செய்யும் அலுவலர்களிடம் விண்ணப்பங்களை துல்லியமாகவும், விரைவாகவும் பதிவு செய்ய அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது, சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் சிவக்குமார், விருதுநகர் ஊராட்சி ஒன்றியத் தலைவர் திருமதி சுமதி ராஜசேகர், விருதுநகர் நகர்மன்றத் தலைவர் மாதவன், திருச்சுழி, காரியாபட்டி, விருதுநகர் வட்டாட்சியர்கள், அரசு அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.



சிவகங்கையைச் சேர்ந்த நாச்சன்காளை மகன் பிரதீப் 27 கமலக்கண்ணன் மகன்கள் ஆதித்யன் (16) அருண்பிரகாஸ் (13) ஆகிய மூன்று இளைஞர்கள் நேபாளத்தில் நடைபெற்ற உலக விளையாட்டுப் போட்டிகளில் சிலம்பு போட்டியில் இந்திய அணி சார்பில் 3 பேரும் தங்கப்பதக்கம் பெற்று முதலிடத்தைப் பெற்றார்கள்.

# சர்வதேச புலிகள் தினம்

*ஜெய்ப்பூர், ஜூலை 31-*

ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் புலிகள் தினத்தை முன்னிட்டு பிறந்த ஒரு புலிக்குட்டிக்கு பாராலிம்பிக் பதக்கம் வென்ற அவனி லெகாராவின் பெயர் சூட்டப் பட்டுள்ளது என்று அம்மாநில முதல்வர் அசோக் கெலாட் தெரிவித்தார். மற்ற குட்டிகளுக்கு ‘சிரஞ்சீவி’ மற்றும் ‘சிராயு’ என்று பெயர் சூட்டப்பட்டது. இதுகுறித்து ராஜஸ்தான் மாநில முதல்வர் அசோக் கெலாட் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

### தி.மு.க மாணவர் அணி

# நகர, பகுதி, ஒன்றியம், பேரூர் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்கான விண்ணப்பம்!

## மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன், எம்.எல்.ஏ. அறிவிப்பு !

கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நகர, பகுதி, ஒன்றியம், பேரூர் அமைப்பாளர் துணை அமைப்பாளர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

நகர, பகுதி, ஒன்றியம், பேரூர் அமைப்பிற்கு ஒரு அமைப்பாளர், ஐந்து துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படுவர்.

துணை அமைப்பாளர்களில் ஒருவர் ஆதிதிராவிடர்/பழங்குடியின இனத்தைச் சேர்ந்தவராகவும் மற்றும் பெண் துணை அமைப்பாளர் ஒருவரும் இருப்பது அவசியம்.

ஒரு துணை அமைப்பாளர், கண்டிப்பாக தற்போது கல்லூரியில் பயிலக்கூடிய மாணவராக இருத்தல் அவசியம்.

இப்பொறுப்புகளில் உள்ள தற்போதைய நிர்வாகிகள், மீண்டும் அப்பொறுப்புகளுக்கு வர விரும்பினால், அவர்களும் விண்ணப்பிக்க வேண்டியது அவசியம்.

30 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டும் இப்பொறுப்புகளுக்கு விண்ணப்பிக்கவும்.

நியமிக்கபடவுள்ள நிர்வாகிகள் அனைவரும் கல்லூரி/டிப்ளமோ படிப்பை முடித்தவராகவோ அல்லது தற்போது கல்லூரியில் பயிலக்கூடியவராகவோ இருத்தல் அவசியம்.

முரசொலியில் வெளியிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை நகல் எடுத்தோ, மாவட்டக் கழகத்திடமிருந்தோ அல்லது வலைதள முகவரியிலிருந்தோ பதிவிறக்கம் செய்து விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதில் கேட்கப்பட்டுள்ள அனைத்து விவரங்களையும் தெளிவாக, முழுமையாக நிரப்பி, பாஸ்போர்ட் அளவு கலர் புகைப்படம் ஒட்டி விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பத்துடன் கழக உறுப்பினர் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை / ஆதார் அட்டை, கல்விச் சான்றிதழின் நகல் இணைப்பது அவசியம்.

முழுமையாகப் பூர்த்தி செய்த விண்ணப்பங்களை மாவட்டக் கழகத்திலோ, மாவட்ட அமைப்பாளரிடமோ, தலைமைக் கழகத்திலோ ஆகஸ்ட் மாதம், 10ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 06.00 மணிக்குள் ஒப்படைக்க வேண்டும். தாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தை முன்னிட்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

நகர, பகுதி, ஒன்றிய, பேரூர் அமைப்புகளுக்கான அமைப்பாளர்துணை அமைப்பாளர்கள் நேர்காணல், அந்தந்த மாவட்டத்திலேயே மாநில மாணவர் அணி நிர்வாகிகளால் நடத்தப்படும். நேர்காணல் நடைபெறும் நாள், நேரம், இடம் மாவட்டக் கழக செயலாளருடன் கலந்து பேசி பின்னர் தெரிவிக்கப்படும்.

ஒன்றிய கிளைகள், நகரபகுதிபேரூர் வார்டுகளில் மாணவர் அணி நிர்வாகிகளைத் தேர்வு செய்வது குறித்த அறிவிப்பு பிறகு வெளியிடப்படும்.

விண்ணப்பப் படிவம் பதிவிறக்கம் செய்ய: http://surl.li/jmwoy

மேலும் தொடர்புக்கு:
முகநூல் https://www.facebook.com/EzhilarasanCVMP
டுவிட்டர் https://twitter.com/EzhilarasanCvmp

“அண்ணா அறிவாலயம்,”
சென்னை18.
நாள்: 29-07-2023

**சி.வி.எம்.பி. எழிலரசன்,** எம்.எல்.ஏ.
செயலாளர்,
தி.மு.க. மாணவர் அணி